சுற்று நிருபம் (2009/ 05) இன்
பின்னிணைப்பு

# அகில இலங்கைத் தமிழ் மொழித் தினம்

# 2013

தமிழ் மொழிப் பிரிவு
கல்வி அமைச்சு
இசுறுபாய
பத்தரமுல்ல

6. கவிதை நிகழ்வு தற்புதுமையாக அமைதல் வேண்டும்.

67.3 சிறப்பு விதிகள்:
அ. ஆறாந்தரத்துக்கு உட்பட்ட மாணவர்களாயின் பால் வேறுபாடின்றி பங்குபற்றலாம்.

ஆ. ஆறாந்தரத்திற்கு மேற்பட்டவர்களாயின் ஆண்கள் அல்லது பெண்கள் மாத்திரமே பங்குபற்றலாம்.

இ. பொருத்தமான வகையில் இசை ஒலிக்கூறுகளைப் பயன்படுத்தலாம்.

ஈ. பொருத்தமான வகையில் பின்னணிக் காட்சிகள் மேடையலங்கராம் என்பவற்றைக் கையாளலாம்.

உ. மேடை ஆயத்தத்துக்காகப் பத்து நிமிடம் வழங்கப்படும். கவிதா நிகழ்வு தொடங்கி முடியும்வரை திரை மூடித்திறத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

**28.69.0 போட்டி இல : 48**
விசேட பிரிவு 11 தரங்கள் 08, 09
சிங்கள மாணவர்களுக்கான தமிழ் பேச்சு
69.1 விடயப்பரப்பு
1. தமிழ் மொழியைப் பாதுகாப்போம்
2. மூத்தோரை மதிப்போம்
3. சகலருக்கும் அன்பு காட்டுவோம்

**29.71.0 போட்டி இல: 49**
சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து.
**( சொல்வதெழுதுதல்)**
விசேட பிரிவு 1 தரங்கள்: 06, 07
70.0 விடயப்பரப்பு 1. தலைமைத்துவம்

**30.71.0 போட்டி இல: 50**
சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து.
**( சொல்வதெழுதுதல்)**
விசேட பிரிவு 11 தரங்கள்: 08, 09
70.0 விடயப்பரப்பு 1. இணையம்

**எஸ்.எம் கோத்தாபய ஜயரட்ண**
**செயலாளர்**
**கல்வி அமைச்சு**
**இசுறுபாய**
**பத்தரமுல்ல**



**எனது இல.: ஈடி/1/16/1/2**
**தமிழ் மொழிப்பிரிவு,**
**இசுருபாய,**
**பத்தரமுல்ல.**
**2012.12.01**

அ. மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கு,
ஆ. மாகாணக்கல்விப் பணிப்பாளர்களுக்கு,
இ. வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு,
ஈ. பாடசாலை அதிபர்களுக்கு,

## அகில இலங்கைத் தமிழ் மொழித்தினம்-2013

01. 2013 ஆம் ஆண்டிற்குரிய அகில இலங்கைத் தமிழ் மொழித்தின போட்டிகள் யாவும் இவ்விணைப்பில் குறிப்பிடப்படும் விடயங்களுடன் சுற்று நிருப இலக்கம் (2009/05) குறிப்பிட்டவாறே நடைபெறல் வேண்டும்

02. 2013 ஆம் ஆண்டிற்குரிய போட்டிகள் நடாத்தப்படவேண்டிய திகதிகள் பின்வருமாறு.
அ. பாடசாலை மட்டப் போட்டிகள் 2013.02.28 ஆம் திகதிக்கு முன்பு
ஆ. வலய மட்டப் போட்டிகள் 2013.04.28 ஆம் திகதிக்கு முன்பு
இ. மாகாண மட்டப் போட்டிகள் 2013.05.15 ஆம் திகதிக்கு முன்பு

03. தேசிய மட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் 2013.06.01 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பப்படல் வேண்டும் இம்முறை சுவாமி விபுலானந்தரின் தினமாகிய யூலை மாதம் 19ஆம் திகதி தேசிய நிலைப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் நடாத்த உத்தேசித்துள்ள மையால் குறிப்பிட்ட திகதிக்குப் பிந்திய விண்ணப்பங்களை நிராகரித்து, திட்டமிட்டபடி தேசிய நிலைப் போட்டிகள் நடாத்தப்படும்என்பதையும் சகலரும் கருத்திற்கொள்ளவும்.

### அ. (சு.நி. :13.4 இல் திருத்தம்)

தனிப்போட்டி நிகழ்ச்சிகளில்ஒரு போட்டியாளர் ஒரு போட்டி இலக்க நிகழ்ச்சியில் ஒருமுறை மாத்திரம் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்

ஆ. திறந்த போட்டிநிகழ்ச்சிகளில் ஒரு போட்டியாளர் பங்குபற்றி தேசிய மட்டத்தில் 1,2,3ஆம் இடங்களில் ஏதாவது ஒன்றினைப் பெற்றால் அப் போட்டி நிகழ்ச்சியில் ஒரு வருடத்தின் பின் பங்கு பற்றலாம். வெற்றி பெற்ற போட்டி நிகழ்ச்சிதவிர்ந்த வேறு திறந்த போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்கு எவ்வித தடையும் இல்லை.

## இ. (சு.நி:17.0 இல் திருத்தம்)

**ஈ.** குழு நிகழ்ச்சிகளுக்கு சகல மட்டங்களிலும் கட்டாயம் துறைசார்ந்த 5 நடுவர்கள் மத்தியஸ்தம் வகிக்கவேண்டும்.

**உ.** குழு நிகழ்ச்சிகள் சகல மட்டங்களிலும் விண்ணப்பத்துடன் அரங்க ஆற்றுகைப் பிரதிகள் அதிபரின் உறுதிப்படுத்தலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பிரதிகள் சமர்ப்பிக்காதவற்றினை மேடையேற்ற அனுமதிக்கக் கூடாது.

**ஊ.** நாட்டார் பாடல்களுக்கு 12 தொடக்கம் 15 நிமிடங்கள் வரை பயன்படுத்தலாம். உடுக்கு, டோலக், டொல்கி, பறை, தப்பு, சங்கு, சேமக்கலம், கொம்பு, புல்லாங்குழல், புத்தளிப்புக்கருவிகள் சுருதிப்பெட்டி, இவற்றில் பொருத்தமானவற்றினை மட்டும் பயன்படுத்தலாம். சுருதிப் பெட்டி ஆதாரவாத்தியமாகையால் அதுபக்கவாத்தியமாகக் கருதப்படக் கூடாது. நாட்டார் பாடல் நின்றும், இருந்தும் பாடலாம். பின்புலத்தில் நடைபெறும் காட்சி, கருப்பொருளின் அடிப்படையில் மேடை பின்னணி அலங்கரிக்கப்படலாம். பின்புலக் காட்சிக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**எ.** முஸ்லிம் நிகழ்ச்சி - முஸ்லிம் கலாசார நிகழ்ச்சி என பெயர் மாற்றப் பட்டுள்ளது.

**ஏ.** சிங்கள மாணவர்களுக்கான நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்கு முன்னர் தயவு செய்து சுற்று நிருபத்தினை நன்குவாசிக்கவும்.**இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் (தாய், தந்தையர்) இருவரும் கட்டாயம் சிங்கள இனத்தவராக இருத்தல் வேண்டும்.** இதனைப் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதி) மூலம் நிரூபித்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் கட்டாயம் இப் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். **இல்லாதவிடத்து விண்ணப்பத்தை நிராகரித்தல் வேண்டும்.**

**ஐ.** சகல பாடசாலைகளிலும் தமிழ் தினப் போட்டிகள் முறைப்படி நடை பெற்றதை வலயக் கல்விப்பணிப்பாளர்கள் உறுதி செய்தல் வேண்டும். சகல விதமான போட்டிகளுக்கும் நடுவர் பட்டியல் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். இவ் அனுமதிக்கடிதம் இல்லாத பெறுபேறு களை ஏற்றுக்கொள்ள வேண்டாம்.



ஆகிய இருதலைப்புகளில் ஒன்று உரிப் பொருளாக உள்வாங்கப்பட்டு கதைப்பாங்கினைக் கொண்ட அமைந்த இசையும் உரையும்கலந்தவடிவமாகத் தயாரிக்கப்பட்ட வில்லுப்பாட்டு.

**27. 67.0 போட்டி இல. 45 தமிழறிவு வினாவிடை**

திறந்த போட்டி

**67.1 விடயப்பரப்பு:** 1. இலக்கிய வரலாறு
2. ஈழத்து இலக்கியம்
3. இலக்கணம்

என மூன்று சுற்றுகளாக நடைபெறும்.

**28.67.0 போட்டி இல 46 முஸ்லிம் சமூக கலாசார நிகழ்ச்சி**

திறந்த போட்டி

67.1 விடயப் பரப்புகள்:

முஸ்லிம் சமூக கலாசாரப் பின்னணியிலான வாழ்வியல் கோலத்தைமையமாகக் கொண்டு இஸ்லாமிய வரலாறு, சரித்திர சம்பவங்களில் அல்லது இஸ்லாமிய இலக்கியங்களிலிருந்து அல்லது முஸ்லிம் கவிஞர்களின் படைப்புக்களிலிருந்து அல்லது காத்திரமான புதிய தொனிப்பொருளை வெளிப்படுத்தும் வகையில் கவிதை வடிவிலான ஆக்கத்தைச் சிருஷ்டித்து எடுத்துரைஞர்கள் மூலம் கவிதா நிகழ்வாக நிகழ்த்திக் காட்டல் வேண்டும்.

67.2 விளக்கம்:

1. தெரிந்தெடுக்கப்பட்ட விடயப்பொருளை மையமாகக் கொண்டு ஆரம்பம், சிக்கல், வளர்ச்சி, உச்சம், முடிவு என்ற கட்டமைப்புக்கேற்ப நெடுங்கவிதையை உருவாக்கல் வேண்டும்.

2. நெடுங்கவிதையின் கட்டமைப்பு ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய சம்பவங்களின் அல்லது நிகழ்ச்சிகளின் அல்லது பிரச்சனைகளின் தொகுப்பாக அமைதல் வேண்டும்.

3. எடுத்துரைஞர்கள் தனிமொழியாக அமையுமாறு கவிதையை எடுத்துரைத்தல் வேண்டும்.

4. கவிதைக்கூடாக வெளிப்படும் காட்சிப் பாங்கான செயல்களை அல்லது சம்பவங்களை எடுத்துரைஞர்கள் ஆற்றுகையாக நிகழ்த்திக்காட்டல் வேண்டும்.

5. கவிதையை உணர்வுபூர்வமாக்குவதற்கு அல்லது புத்தாக்கம் ஆக்குவதற்கு இடையிடையே பொருத்தமான வகையில் பாடல்களை அல்லது பைத் - கஸீதா என்பவற்றைச் சேரத்துக் கொள்ளலாம்.

- ❖ அவை முன்னிறுத்தும் வாழ்க்கைப் பிரச்சனைகள் மோதுகைகள், மகிழ்ச்சிகள் என்பவற்றை இனங் காணுங்கள்.
- ❖ சமகால கதாபாத்திரங்களைப் பயன்படுத்தி,அவற்றைத் துன்பியல் சார்ந்ததாக அன்றி மகிழ்ச்சியான முடிவைத் தரும் பாங்கில் நாடகமாகச் சித்தரியுங்கள்.

பாத்திரங்கள் நெருக்கடிகள் கஷ்டங்களைச் சந்திக்கின்ற மகிழ்வாக கணங்களின் போது மேற்கொள்கின்ற செயல்களும் எமக்கு நயப்பைத் தருவனவாக (இரசனை) அமைய வேண்டும் என்பதனைக் கருத்திற் கொள்ளுங்கள்.

மகிழ்நெறி நாடகங்கள் என்பவை சிரிப்பினூடாக உலகைஆய்வுசெய்பவை. மனிதக் குணங்களை, சமூக சிக்கல்களைநகையுணர்விற்கூடாககேள்விக்கு உட்படுத்துபவை. சிக்கல்களைத் தணித்து மகிழ்ச்சியான முடிவை நோக்கி நகர்பவை என்பதை மனங்கொள்ளுங்கள்.

**63.5 போட்டி விதிகள்:**

- ♦ நாடகங்கள்யாவும் கருத்தாழம் மிக்க மகிழ்நெறிப் பண்புடையனவாக அமைதல் வேண்டும்
- ♦ மகிழ்ச்சியானமுடிவைத்தருபவையாகஅன்றேல் மகிழ்ச்சியான முடிவுக்குளம்மை இட்டுச் செல்வதாகஇருத்தல் வேண்டும்.
- ♦ அவ்வாறுசித்தரிக்கும் போது நாடகத்தின்கருத்தாழம் மற்றும் காத்திரத்தன்மைக்குஊறுஏற்படலாகாது
- ♦ பார்போரிடத்தே வலிந்து சிரிப்பை ஏற்படுத்தும் பொருட்டு நாடகப் பொருத்தமற்றசெயல்கள், சொல்லாடல்கள் மாற்றுத் திறனாளிகளைக் கேலி செய்தல்போனறவற்றைப் பயன்படுத்துவதைக் கண்டிப்பாக தவிர்த்தல் வேண்டும்
- ♦ சினிமாப் பாணியிலான சித்திரிப்பு இடம்பெறலாகாது.
- ♦ நாடக சித்தரிப்பு முறையானது யதார்த்தபாணியிலோ அன்றெல் யதார்த்தமில்லாதபாணியிலோ அமையப் பெறலாம்
- ♦ நாடகப் பாணிக்கு ஏற்பச் சொல்லாடல், உரையாடல் பாங்கு இருத்தல்வேண்டும்.

பிரதான நடிப்பிடம் மேடையே என்ற போதிலும் மேடைக்கு முன்னால் உள்ளவெளியையும் தேவையின் பொருட்டு நடிப்பிடமாக மாற்றிக் கொள்ளமுடியும்.

**26. 64.0 போட்டி இல. 43 வில்லுப் பாட்டு**

திறந்த போட்டி

**64.1 விடயம்:**

1.சங்கம் சொல்லும் அகத்திணை மரபு

அல்லற் காலை நில்லலன் மன்னே



**04 36.0 போட்டி இல. 18 - பேச்சு**

முதலாம் பிரிவு தரங்கள் 04,05

36.2 விடயத் தலைப்பு :

அ. பொறுத்தார் பூமியாள்வார்
ஆ. மாலை முழுதும் விளையாட்டு
இ. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
உ. நூல் பல கல்

**05. 37.0 போட்டி இல. 19 - பேச்சு**

இரண்டாம் பிரிவு தரங்கள் 06,07

37.2 விடயத் தலைப்பு

அ. விளையும் பயிரை முளையில் தெரியும்
ஆ. பொறுமையும் பொறாமையும்
இ. பாரதியின் இலட்சியப் பெண்
ஈ. விபுலானந்த அடிகளின் மொழிபெயர்ப்புத் திறன்

**06. 38.0 போட்டி இல. 20 பேச்சு**

மூன்றாம் பிரிவு தரங்கள் 08,09

38.2 விடயப்பரப்பு

அ. பூகோளமயமாக்கலும் எமது நாடும்
ஆ. தமிழ்க் காப்பியங்களின் பெருமை
இ. தமிழுக்குப் பாரதி
ஈ. மருத்துவ உலகின் விந்தைகள்

**இல. 07.**
**போட்டி இல.: 23. பாவோதல் -**
**முதலாம் பிரிவு, தரங்கள் - 04, 05**
(தெரிவுப் பாடல்களில் ஒன்று)
திருக்குறள்: அதி 30. வாய்மை. அதி 51. கேள்வி

**அ) பாரதியார் கவிதை:**
பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம்.......
தென்றல் வர வேணும்

**ஆ) பழமொழி நாநூறு:** 06.
உணவிற்கு இனிய .............
கற்றலின் கேட்டலே நன்று

**இ) ஏலாதி (03)**
இடர் தீர்த்த வெள்ளாமை ....................
விண்டவர் நூல் வேண்டா விடும்

**இல. 08.**
**போட்டி இல 24. பாவோதல் -**
**இரண்டாம் பிரிவு தரங்கள் - 06, 07**
(தெரிவுப் பாடல்களில் இரண்டு )
திருக்குறள்: அதி 25. அருள் உடைமை.அதி 51 தெரிந்து கொள்ளல்

**அ) பழமொழி நாநூறு:** 93
தம் தொழில் ..........................
நந்து உழுத எல்லாம் கணக்கு
**ஆ) ஏலாதி (08)**
கற்றாரைக் கற்ற துணரா ............................
பண்டிதராய் வாழ்வார் பயின்று

**இ) கம்பராமாயாணம்:**656 பால காண்டம்
தயரதன் புதல்வன் என்பார் ..............................
கயல்பொரு கடவுள்வைகும் கடவுளே காணும் என்பார்

**ஈ) பாரதியார் கவிதைகள்:**
வெள்ளை நிலாவிற்கு வானத்தை மூடி
விரிந்து பொழிவது கண.....................
சேர விரும்பினன் கண்டாய்

**இல.09. போட்டி இல 25. பாவோதல் -**
**மூன்றாம் பிரவு தரங்கள் 08.09.**
(தெரிவுப் பாடல்களில் மூன்று )
திருக்குறள்: அதி 63. இடுக்கண் அழியாமை அதி 102 நாண் உடைமை.



அடைக்கலக் காதையில் ஆரம்பித்து (கவுந்தியடிகள் கோவலனுடன் கண்ணகியை அடைக்கலமாகத் தருதல்) கொலைக்களக்காதை, (சிலம்பு விற்கச் சென்ற கோவலன் பொற்கொல்லன் சூழ்ச்சியறியாது மன்னவன் ஆணையால் கொலை செய்யப்படுதல்) ஆய்ச்சியர் குரவையதை் தொடர்ந்து வழக்குரை காதை (வெட்டுண்ட கணவரது உடலைக் கண்டு கண்ணகி புலம்பல், தன் கணவன் கள்வன் அல்லன் என மன்னன் முன்னர் மெய்ப்பித்தல்.தவறுணர்ந்த மன்னன் உடன் உயிர் நீத்தல் (அழற்படுகாதைவரை) (சினந்தணியாத கண்ணகி தன் ஆற்றலால் மதுரையை எரித்தல்) இடம்பெற வேண்டும்.

**25. 63.0 போட்டி இல. 42 மேடை நாடகம்**
திறந்த போட்டி
63.1கீழ்க்காணும் விடயப் பொருள்களுள் ஒன்றினைத் தெரிவு செய்து, சமகால சமூகப் பிரச்சனைகளைக் கதைப் பொருளாக்கிக் கருத்தாழம் மிக்க நாடகங்கள் மகிழ் நெறிப்பாங்கில் தயாரிக்கப் பெறுதல் வேண்டும்.

**63.2 விடயப் பொருள்: நாடகப் போட்டிக்கான கருக்கள்**
i. ஒய்யாரக் கொண்டை
ii. பொம்மலாட்டம்
ii. சுமை தாங்கி
iv. ஏட்டுச் சுரக்காய்
v. நெய்தல்

புள்ளித்திட்டம்

| | | |
|---|---|---|
| i. | நாடக எழுத்துருவாக்கம் | 10 |
| ii. | நடிப்பு | 40 |
| ♦ iii. | அரங்க விதானிப்பு | 10 |
| iv. | நெறியாள்கை | 20 |
| v. | கட்டொழுங்கு (கலைத்துவம், நிர்வாகம்) | 15 |
| vi. | நேர முகாமைத்துவம் | 05 |
| | **மொத்தம்** | **100** |

**63.3 போட்டி விதிகள்**
❖ விடயப் பொருள் ஒவ்வொன்றினதும் நேரடிக் கருத்துப் பற்றியும் மறைந்து நிற்கும்கருத்துக்கள் பற்றியும் சிந்தியுங்கள்.
❖வாழ்க்கைக்கும் அவற்றிற்கும் இடையிலான பிணைப்புத் தொடர்பைக் கண்டறியுங்கள்

**23. போட்டி இல: 38 - நடனம் தனி**

**ஐந்தாம்பிரிவு தரங்கள் 12,13**

**59.1 விடயம் :கீர்த்தனை நேரம் 8-10 நிமிடம்**

**திருகோணமலை லலிதாம்பாள்தேவஸ்தானம் சுவாமி ஸ்வானந்தா அவர்களால் இயற்றப்பட்ட கீர்த்தனைக்குப் பரத நடனம் அமைத்தல்**

**கீர்த்தனை**

**இராகம் :கல்யாணி தாளம் : ஆதி**

**பல்லவி**

, இடது பதம் எடுத்த கோணேசா - என்

, இதயம் உனக்கன்றோ இகபரசுகம்தரு தென்கைலைவாசா

1. நட்டுவாங்கத் தாளமும் பின்னணியும் போதுமானவை. அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்
2. கல்யாணி இராகத்திலேயே பாடல் அமைய வேண்டும்.

**24.60.0 போட்டி இல. 39 நடனம் - குழு - 1**

தரங்கள் - 6, 7, 8, 9 8-10 பேர்

நேரம் : 8 - 10 நிமிடம்

61.0 விடயம் : ''**ஆதிவாசிகள் நடனம்**''

- ஆதிவாசிகள் பற்றிய பாடலை இயற்றிப் பாடலாம்.அல்லாதவிடத்து வாத்தியஇசைக்கும் நடனம் அமைத்து ஆடலாம்
- ஆதிவாசிகளால் பயன்படுத்தப்படும் பொருட்களைப் பயன்படுத்தாதுஅவற்றைக் குறியீட்டு மூலமே காட்டப்படுதல் வேண்டும்
- (மிருதங்கம், தபேலா, தவில்) இம்மூன்று கொட்டுவாத்தியங்களையும் தவிர்த்து வேறு ஏதாவது பொருத்தமான ஒரு கொட்டு வாத்தியத்தைப் பயன்படுத்த வேண்டும்.

கொட்டு வாத்தியம் ஒன்றைத் தவிர வேறு இசைக்கருவிகள் பயன்படுத்தக் கூடாது.

நட்டுவாங்கத்துடன் பாடகர் இருவர் உட்படப் பொருத்தமான கொட்டுவாத்தியத்துடன் மொத்தம் நான்கு பேரிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும

பாடகர்கள் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் இல்லை.

**24. 61.0 போட்டி இல. 40 நாட்டிய நாடகம் ஆடல் கதை**

திறந்த போட்டி போட்டியாளர் 9 - 12 பேர்

நேரம் : 15 - 17 நிமிடம்

61.1 விடயம்: மதுரையம்பதி



அ) **பழமொழி நாநூறு:** 78

தீப்பால் ............................

வில்லோடு காக்கையே போன்று

ஆ) **ஏலாதி (61)**

கூத்தும் ......................

இழுக்கு மிழவுந் தரும்

இ) **கம்பராமாயாணம்:** 369 பால காண்டம்

சிம்புகள் ............................

பிலம்புக நிலக்கிரிகள் பின் தொடர வந்தாள்

ஈ) **பாரதியார் கவிதைகள்:**

பொழுது புலர்ந்தது ................................

வியப்பிது காண்! பள்ளியெளுந் தருளாயே!

**இல. 10.**

**போட்டி இல 26. பாவோதல் - நான்காம் பிரிவு, தரங்கள் 10,11.**

(தெரிவுப் பாடல்களில் நான்கு)

திருக்குறள்: அதி 18. வெ.ஃகாமை. அதி 80 நட்பு ஆராய்தல்

**ஏலாதி (1,2)**

கொலை ............................

துன்பந் துடைத்த வரிது

**புறநாநூறு : 239. இடுக சுடுக எதுவும் செய்க**

தொடியுடைய ...................................

வேந்துடை அவையத்து ஓங்கு புகழ் தோற்றினன்

**பதிற்றுப்பத்து : 55 துஞ்சும் பந்தர்.**

ஆன்றொள் கணவ .............................

குடவர் கோவே கொடித்தேர் அண்ணல்

**பத்துப்பாட்டு : சிறுபாண் ஆற்றுப்படை**

புள்ளார் இயத்த ....................................

தாது படு தண் நிழல் இருந்தனம் ஆக

**குறுந்தொகை : 300**

**இந்த உலகம் பெரிதல்ல**

குவளை நாறும் .............................

விடல் சூ ழலன் யான் நின்னுடை நட்பே

**பாரதிதாசன் கவிதைகள் : தமிழ் - 24 தமிழ் பேறு**

ஏடெடுத்தேன் .......................

கோலங்கள் யாயும் மலை மலையாய் வந்து

இல. 11.

**போட்டி இல 27. பாவோதல் - ஐந்தாம் பிரிவு, தரங்கள் 12,13.**

(தெரிவுப் பாடல்களில் ஐந்து)

திருக்குறள்: அதி 57. வெருவந்த செய்யாமை. அதி 77. படைமாட்சி

**கம்ாராமாயாணம் ஆரணிய காண்டம்: (256, 257, 258)**

பூவிலோன் .....................................

தீவினை தீய நோற்றுத் தேவரின் பெற்றது என்றாள்

**புறநானூறு (377) நாடு அவன் நாடே (16-30 வரிகள்)**

மலை பயந்த மணியும் , ...........................

அடல் வெங்குரிசில் !மன்னிய நெடிதே

**ஏலாதி: (20,21,22)**

இளமை ..............................

வீடே புரிதல் விதி

வாளஞ்சான் .........................

பாலினூ லெய்தப் படும்

குண நோக்கான் .................................

வாய்காப்பு கோடல் வனப்பு

**பதிற்றுப் பத்து (49) செங்கை மறவர் (4 -17 வரிகள்)**

களிறு பரந்தியலக் .......................................

பெருஏ சினக்குட்டுவன் கண்டனம் வரற்கே

**பத்துப்பாட்டு :மதுரைக் காஞ்சி மூங்கில் எரிந்து மலை முற்றிலும்கரிய**

இரு வெதிர்ப் .....................................

பாலை சான்ற சுரம் சேர்ந்து ஒரு சார்

**குறுந்தொகை :**

**252. பழிக்கு அஞ்சுபவன்**

நெடிய திரண்ட ....................................

பழியாங்கு ஒல்பவோ காணுங் காலே

**253. ஒடோடி வருவார் !** கேளார்

கேளார் ஆகுவர் .....................................

கொடு உயிர் பிறங்கல் மலை இறந்தோரே

**பாரதிதாசன் கவிதைகள் : தமிழ் 62 இசைத்தமிழ்**

**மேசை விளக்கேற்றி - நாற்காலி**

**மீதில் அமர்ந்தே நான்**

**என்னைச் சுமந்து பெற்றார்............................**



**47.1 விடயம் :**

அ. தரப்பட்ட அபிநயப்பாடலை பொருத்தமான இசையுடனும் அசைவுடனும் வெளிப்படுத்தல்

ஆ. சாஸ்திரிய நடனம் தவிர்க்கப்பட வேண்டும்

இ. பாடலின் பொருத்தப்பாட்டிற்கேற்ப அசைவிற்கான இடத்தை எடுத்துக்கொள்ளலாம்.

ஈ. தத்தமது கலாசார உடையுடன் கட்டாயமாக வருதல் வேண்டும்.

உ.வேடத்திற்குரிய உடையும் ஒப்பனையும் தவிர்க்கப்படல் வேண்டும்.

**47.2 நேரம் 4 - 5 நிமிடங்கள்**

**47.3 புள்ளித்திட்டம் - 100 புள்ளிகள்**

| | | |
|---|---|---|
| 1 | பாடுந்திறன் | 20 |
| 2 | சுருதி | 10 |
| 3 | லயப் போக்கு | 10 |
| 4 | மெய்ப்பாட்டுணர்ச்சி | 15 |
| 5 | அபிநயம் | 15 |
| 6 | உச்சரிப்புத் தெளிவு | 15 |
| 7 | இசை ஆக்கம் | 15 |
| | **மொத்தம்** | **100** |

**பாடல்:**

செல்லக் கண்ணே சின்னப் பாப்பா
சேர்ந்து பாடு - நாம்
செந் தமிழில் பா இசைப்போம்
சேர்ந்து பாடு

நல்ல தமிழ்ப் பா இசைத்தால்
சின்னப் பாப்பா - உன்
நாவில் இன்பத் தமிழ் வளரும்
செல்லப் பாப்பா

நாவில் இன்பத் தமிழ் வளர்த்தால்
சின்னப் பாப்பா - நீ
நல்ல தமிழ்ச் செல்வம் ஆவாய்
செல்லப் பாப்பா

காவலன் போல் பூவுலகில்
சின்னப் பாப்பா - நீ
கால மெலாம் தமிழ் வளர்ப்பாய்
செல்லப் பாப்பா

திரை கடலைத் தாண்டி எங்கே
சென்ற போதும் - நம்
செல்வம் தமிழ் என்று கொண்டு
செல்லு பாப்பா

பெரு மகனாய் வாழும் நாளில்
பேசும் தமிழை - நீ
பேணிச் சிறார் நாவில் சேர்த்து
செல்லு பாப்பா

## 13. 49.0 போட்டி இல. 29 இசை தனி

இரண்டாம் பிரிவு தரங்கள் 06,07

**49.1** விடயம்:
விரும்பிய தமிழ்க் கீர்த்தனை ஒன்றை ஒரே இராகத்திலும் ஒரே தாளத்திலும் பாடுதல். (சிஸ்டைஸ்வரம் தவிர்க்கவும்)

**14. 50.0 போட்டி இல:30 இசை தனி**

**மூன்றாம் பிரிவு தரங்கள் 08,09**

**50.1 விடயம்:**
பின்வரும் இராகங்களில் விரும்பிய ஏதாவது தமிழ் கீர்த்தனையில் ஒன்றைப்பாடுதல் (சிட்டைஸ்வரம் தவிர்க்கவும்)

1. ஆபோகி
2. சுத்தசாவேரி
3. பந்துவராளி
4. சிந்துபைரவி
5. காபி

**15. 51.0 போட்டி இல. 31 இசை தனி**

**நான்காம் பிரிவு தரங்கள் 10,11**

**விடயம்**
பின்வரும் உருப்படிகளில் விரும்பிய ஒரு உருப்படியைப் பாடுதல்
(சிட்டைஸ்வரம் ஆக்கம் செய்து பாடலாம்)

1.ஆடாது அசங்காது - மத்யமாவதி - ஆதி
2 ஓடோடி வந்தேன் - தர்மவதி - ஆதி
3. அசைந்தாடும் மயில் - சிம்மேந்திரமத்திமம் - ஆதி
4. கண்ணனைப் பணிமனமே - சண்முகப்பிரியா - ஆதி



**16. 52.0 போட்டி இல. 32 இசை தனி**

ஐந்தாம் பிரிவு தரங்கள் 12,13

52.1 இராக ஆலாபனை செய்து அவ்விராகத்தில் விரும்பிய தமிழ்க் கீர்த்தனை ஒன்றைப் பாடி நிரவல் செய்து கற்பனாஸ்வரம் முதலாம் இரண்டாம்காலங்களில் பாடுதல்
ஆ. ஈழத்து மெல்லிசைப் பாடல்
( புள்ளித்திட்டத்தில் ஈழத்து மெல்லிசைப் பாடல் என மாற்றிக் கொள்ளவும்)

**17. 53.0 போட்டி இல. 33 இசை**

**இசை - குழு 1** தரங்கள் 6,7,8,9

53.1 விடயம்: பின்வரும் பாரதியார் கவிதைப்பாடலில் விரும்பிய அடிகளைத் தெரிவு செய்து குறைந்தது மூன்று இராகங்களில் இராக மாலிகையாக ஒரே தாளத்தில் பாடுதல்.
(ஸ்வரக்கோர்வைகள், நடைமாற்றம் தவிர்க்கவும்)
வெண்ணிலாவே' என்ற தலைப்பில், எல்லையில்லாதோர் வானக் கடலிடை' எனத் தொடங்கும் ஐந்து பாடல்களில் விரும்பிய அடிகளைத் தெரிவு செய்து பாடவும்

**18. 54.0 போட்டி இல. 34 இசை**

**இசை - குழு-11** தரங்கள் 10.11,12,13

54.1 விடயம்:

அ. விரும்பிய ஒரு தமிழ் ஆதி தாள தானவர்ணம் ஒன்றைப்பாடுதல்
(பூர்வாங்கம், உத்தராங்கம் இரண்டையும் இரண்டு காலங்களில் பாடுதல்)
ஆ. விரும்பிய ஒரு தமிழ்த் தில்லானா

## நடனம்

**19. 56.0 போட்டி இல. 35 நடனம்-தனி**

இரண்டாம் பிரிவு, தரங்கள் 06,07
நேரம்:- 5 - 6 நிமிடங்கள்

56.1 விடயம்: பின்வரும் பாடலுக்கு பரத நடனம் அமைத்தல்
இராகம் : மாண்டு தாளம் : ஆதி

**பல்லவி**

சின்ன வயதில் நீ செய்த குறும்பையெல்லாம்
சிந்தனை செய்து பாரடா - முருகா
என்ற பாடலின் அனுபல்லவி, சரணம் ஆகியவற்றிற்கான பரத நடனம்அமைத்தல்